எனது இல : NP/RDD/Amended Bylaw/2014

# வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படும் மற்றும் புனரமைக்கப்படும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள்/ மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தொடர்பான திருத்தப்பட்ட யாப்புவிதி

கொழும்பு கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளரின் கி/பி/3/1/1 இலக்க 18.09.1978ந் திகதிய சுற்றறிக்கைக்கும், அது தொடர்பாக திருத்தப்பட்ட கிராம அபிவிருத்தி செயலாளரின் 31.10.1978ந் திகதிய சுற்றறிக்கைக்கும் அதன் பின்னர் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 13ந் திருத்தச் சட்டத்தின் மூலம் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு கிராம அபிவிருத்தி செயற்பாடுகள் கையளிக்கப்பட்டதற்கமைய மேலதிகமாக வெளியிடப்பட்ட மாகாண கிராம அபிவிருத்தி சுற்றறிக்கைகளின்படியும் வடக்கு கிழக்கு கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் NEP/RD/By Law Rivision ஆம் இலக்க 01.07.2006 , 01.01.2007 ஆம் திகதிய திருத்தப்பட்ட யாப்பு விதியின் 1,2,3,4.1,5,7.1,7.16,8.6,9.5,9.8.3.1,11,12,14,15,17 போன்ற உறுப்புரைகள் வடமாகாணசபையின் பிரதம செலாளரின் அனுமதியுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டு தழுவல் அங்கீகாரத்துடன் 01.08.2014 ந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அனுமதிக்கின்றேன் என்பதனை வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் ஜோசப் ஜெகராஜசிங்கம் ஹெமிலஸ் பெலிசியன் ஆகிய நான் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

திகதி : 01.08.2014

பணிப்பாளர்,
கிராமஅபிவிருத்தி
வட மாகாணம்.

## அத்தியாயம் - 1

### சங்கங்களின் அமைப்பு

1. ஒவ்வொரு கிராமத்திலும் கிராம மக்களின் பொருளாதார, சமூக பண்பாட்டு வளர்ச்சிக்காக
   (i) சமயம், பண்பாடு
   (ii) விவசாயம், கைத்தொழில், சேவை
   (iii) சுகாதாரம், கல்வி
   (iv) சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு

   முதலான துறைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அதன் மூலம் தேசிய அபிவிருத்திக்கு உதவும் பொருட்டு கீழே தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, புதிய கிராம அபிவிருத்திச் சங்கங்கள் / மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றை ஆரம்பித்தல் வேண்டும்.

   (அ) கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராமம் அல்லது கிராமங்களில் ஆகக்குறைந்தது 30 குடும்பங்கள் வசித்தல் அவசியமாகும். 30 இற்கு குறைவான குடும்பங்களை கொண்டுள்ள கிராமங்களிற்கு விஷேட தேவை ஏற்படின் பணிப்பாளரின் அனுமதியடன் சங்கத்தினை அமைக்கமுடியும்.

   (ஆ) கிராம மக்களின் ஒற்றுமை, புரிந்துணர்வு அடிப்படையில் இரண்டு அல்லது மூன்று கிராமங்கள் இணைந்து கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என்பவற்றைத் தாபிக்கலாம். ஆனால் ஒரு கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்டதாகவே இக்கிராமங்கள் அமைய வேண்டும்.

2. கிராம அபிவிருத்திச் சங்கத்தை அல்லது மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தை ஆரம்பிக்கையில் அச்சங்கத்தின் ஆரம்பக்கூட்டம் நடைபெற நிர்ணயித்துள்ள தினத்தன்று 14 நாட்களுக்கு முன்பதாக அதிகாரப் பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் கூட்டம் நடைபெறும் நோக்கம், நடைபெறும் இடம், திகதி, நேரம் மற்றும் உத்தியோகத்தர் தெரிவு குறித்து பிரசாரம் செய்து, (பத்திரிகைகளில் அறிவித்தல், ஆலய விளம்பர பலகைகளில் வெளிப்படுத்துதல்,,பொருத்தமான பொது நோக்கு நிலையங்களின் விளம்பர பலகைகளில் வெளிப்படுத்துதல், ஒலி பெருக்கி மூலமான அறிவித்தல்) தொடக்கக் கூட்டத்தை நடத்துவதற்குரிய ஒழுங்குகளைச் செய்தல் சம்பந்தப்பட்ட கிராம அபிவிருத்தி

உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர், ஆகியோரது உத்தியோகபூர்வ கடமையாகும்.

3. குறைந்த பட்சம் அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட சனத்தொகையில் 51% மானோர் குடும்ப அடிப்படையில் அச்சங்கத்தில் உறுப்புரிமை பெறல் வேண்டும்.(உச்ச எண்ணிக்கை எடுக்கப்பட்டுள்ளது)

4. உறுப்புரிமை

4.1 சங்கத்தின் உறுப்புரிமை பெறுவதற்கான தேவைப்பாடுகள்
- (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரசையாக இருத்தல் வேண்டும்
- (ஆ) கிராமத்தில் தொடர்ச்சியாக குடியிருப்பவராகவும் அக்கிராம அலுவலர் பிரிவில் வாக்காளராக பதிவு செய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 14(2) உறுப்புரைக்கு ஏற்ப தகைமைகளைப் பெற்றவராயிருத்தல் வேண்டும்
- (ஈ) 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- (உ) சித்த சுவாதீனமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
- (ஊ) உறுப்பினர்களாக சங்கத்தில் சேர்ந்துகொண்ட அனைவரும் உறுப்பினர் சந்தாப்பணம் வருடமொன்றிற்கு ரூபா 120.00 செலுத்துதல் வேண்டும். அங்கத்தவர் சந்தா பணம் செலுத்துவதனூடாக வாக்குரிமையினை பெற்றுக்கொள்ளமுடியும். சந்தா பணத்தினை செலுத்துவதனூடாக அங்கத்துவமும் வாக்குரிமையும் உடனடியாக கிடைக்கின்ற போதிலும் நிர்வாக உறுப்பிராக அங்கத்துவம் பெறுவதாயின் கூட்டம் நடைபெறுவதற்கு குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன்னர் சந்தா செலுத்தியிருக்கவேண்டும் என்பது கட்டாயமானதொன்றாகும்.

4.2 பின்வரும் காரணங்களால் உறுப்புரிமை இழக்கப்படும் அல்லது காலாவதியாகும்.
- (அ) மரணம் எய்தல்
- (ஆ) கிராமத்தில் இருந்து வெளியேறி வேறு இடத்தில் வசித்தல்
- (இ) மேலே 4.1இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை இழத்தல்
- (ஈ) சங்கத்திற்கு <u>எழுத்துமூலம்</u> அறிவிக்காமல் 3 கூட்டங்களில் தொடர்ச்சியாக பங்குபற்றாமை
- (உ) வேறு கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினராக இருத்தல்
- (ஊ) சங்கத்தின் நோக்கங்களிற்கு எதிராக செயற்பட்டமை உறுதிப்படுத்தப்படல்.

5. கிராம சேவகர் பிரிவின் பெயரில் அல்லது கிராமத்தின் பெயரில் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் பதிவு செய்யப்படல் அவசியமானதாகும். ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்கள் காணப்படும் போது சங்கம் செயற்படவுள்ள அதிகார பிரதேசத்தை அடிப்படையாக கொண்டு பெயரிடமுடியும், இதன்போது கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும் கிராம சேவையாளரும் தீர்மானித்து பிரதேச செயலாளரின் அனுமதி பெறப்படுதல் வேண்டும். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தனிமனிதனின் பெயரோ புனைபெயரோ சங்கத்திற்கு இடலாகாது.

6. சங்கத்தை பதிவு செய்வது தொடர்பாக உரிய விண்ணப்பப்படிவத்தில் பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் கிராம அபிவிருத்தி அலுவலரிடம் கையளித்தல் வேண்டும். இவ் ஆவணங்கள் யாவும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரால் செவ்வை பார்க்கப்பட்டு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசுடன் கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளருக்கு பதிவிற்காக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் ஏதாவது சங்கத்தினை பதிவு செய்வது தொடர்பான விடயத்தில் சகல அதிகாரம் மற்றும் தற்துணிவினைக் கொண்டுள்ளார்.

7. உருவாக்கப்படும் சகல கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் பின்வரும் பூட்கைகளை எய்துவதற்கு வழிவகுத்தல் வேண்டும்.

7.1 **அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் :**
கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்குடன் அவர்களின் வருமானத்தைப் பெருக்குவதற்காக சொந்த முயற்சியை அடிப்படையாகக் கொண்ட

சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் குறிக்கோளுடன் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

7.2 **சுகாதார நடவடிக்கைகள் :**
கிராம மக்களது உடல் உள நலத்தைப் பேணுவதற்கு அவசியமான சகல சுகாதார நடவடிக்கைகளையும் ஒழுங்கு செய்தல் சங்கத்தின் பணியாகும்.

7.3 **கல்வி :**
கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் ஆகியவை சிறுவர்கள், வயது வந்தோர் கல்வி மேம்பாட்டுக்காக பாலர் பாடசாலைகள், மாலை நேர வகுப்புக்கள் ஆகியவற்றை ஆரம்பித்து நடாத்துவதன் மூலம் கிராம மக்களின் கல்வி நிலையை அதிகரித்தல் வேண்டும். மக்களிற்கு தேவையான சட்டதிட்டங்கள் பற்றிய அறிவினை ஏற்படுத்திக்கொடுத்தல்

7.4 **சூழல் பாதுகாப்பு :**
கிராமத்தின் சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்குரிய செயற்திட்டங்களை மேற்கொள்வதுடன் இயற்கை வளங்கள், விலங்கினங்கள் என்பவை பாதிக்கப்படாத வகையில் சகல அபிவிருத்தி செயற்பாடுகளையும் மேற்கொள்ளக்கூடியவாறு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

7.5 **மகளிர் அபிவிருத்தி :**
மகளிர் அபிவிருத்தி நிலையங்களை அமைப்பதன் மூலம் கிராம யுவதிகளின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தல் வேண்டும். இதற்கென மகளிர் அபிவிருத்திக்கு தேவையான பயிற்சிகளை அளித்தல் மற்றும் சந்தை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தல் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் கடமையாகும்.

7.5.1 பெண்கள் தலைமைத்துவ பயிற்சி , பால்நிலை சமத்துவம், பெண்கள் உரிமை தொடர்பான விழிப்புணர்வு,பெண்களுக்கெதிரான வன்முறைக்கெதிரான நடவடிக்கைகள்,முதலுதவி பயிற்சிகள் என்பன மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களால் மேற்கொள்ளப்படவேண்டும்.

7.6 **தொழிற்பயிற்சி நடவடிக்கைகள் :**
கிராமத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடிய வகையில் தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

7.7 **கிராம விவசாயமும் அபிவிருத்தியும் :**
கிராம மக்கள் அங்கத்துவம் வகிக்கும் அமையம் என்பதனால் பிரதேசத்தின் விவசாய முயற்சிகளை ஒருங்கிணைக்கப்பட்ட வேலைத்திட்டமாக ஒழுங்கு செய்வது சங்கத்தின் பொறுப்பாகும். விவசாய திணைக்கள அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து பெற்றுக்கொள்ளலாம்.

7.8 **விலங்கு வேளாண்மை :**
விலங்கு மருத்துவரின் ஆலோசனைப்படி கிராம மட்டத்திலே கால்நடை வளர்ப்பு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய சகல ஆதரவுகளையும் மக்களுக்கு வழங்குதல் வேண்டும்.

7.9 **குடிசைக்கைத்தொழில் :**
மாதர் அபிவிருத்தி நிலையங்கள், பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் ஆகியன மூலம் அவ்வப்பிரதேசங்களில் கிடைக்கக் கூடிய மூலப்பொருட்கள் உதாரணமாக பிரம்பு, ஈர்க்கு, பனம் பொருட்கள், நாணல், களிமண் போன்றவற்றை பயன்படுத்தி சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும் பொருட்டு சிறுகைத்தொழில்களை ஆரம்பித்தல் வேண்டும். அத்துடன் இப்பொருட்களை விற்பனை செய்வதற்குரிய சந்தை வாய்ப்பு வசதிகளையும் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

**7.10 நுண்கடன் முயற்சிகள் :**
கிராம மக்கள் வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வீடற்றவர்கள் வீடுகளை அமைத்துக் கொள்வதற்காகவும் தேவையான நிதியுதவியினை இலகுவாக பெறும் பொருட்டு சுழற்சிமுறை கடன் வழங்கும் செயற்பாட்டின் மூலம் உதவி வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**7.11 சிரமதான நடவடிக்கை :**
கிராம மக்களின் ஒத்துழைப்புடன் வீதி அமைத்தல், கிணறு வெட்டுதல், விவசாயப் பண்ணை அமைத்தல், சங்கக் கட்டடங்களை அமைத்தல் முதலான பொது முயற்சிகளுக்காக சிரமதான வேலைத் திட்டங்களை ஒழுங்கு செய்வது சங்கத்தின் பணியாகும்.

**7.12 சமய பண்பாட்டு நடவடிக்கைகள் :**
அவ்வப் பிரதேசத்திலுள்ள மக்கள் பின்பற்றும் சமயத்திற்கேற்ப சமய பண்பாட்டு நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல் சங்கத்தின் கடமையாகும்.

**7.13 கலை கலாச்சார நடவடிக்கைகள் :**
பாரம்பரியக் கலைகளை வளர்த்தல், கலைஞர்களைக் கௌரவித்தல் கலையார்வமுள்ள புதிய கலைஞர்களின் முயற்சிகளை ஊக்குவித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும்

**7.14 விளையாட்டு / பொழுதுபோக்கு :**
பல்வேறு வகையான விளையாட்டுக்குழு இசைக்குழு இன்னோரன்னவற்றினை ஆரம்பிப்பதன் மூலம் ஆரோக்கியமான பொழுது போக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் சங்கத்தின் பணியாகும்.

**7.15 நல்லொழுக்கத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் :**
பொருத்தமான நிறுவனங்களினூடாக நல்லொழுக்கத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை மேற்கொண்டு தங்கள் கிராமங்களிலே போதைவஸ்து பாவனை, மது பாவனை, கொலை, கொள்ளை போன்ற சட்ட விரோதச் செயல்கள் ஏற்படாமல் தடுத்து நற்பிரஜைகளை உருவாக்குதல் கிராம அபிவிருத்திச்சங்கங்களின் பணியாகும்.

**7.16 விசேட உதவி தேவைப்படுவோருக்கான திட்டம் :**
தங்கள் பகுதிகளில் வசிக்கின்ற பெண்கள், சிறுவர்கள், மாற்று திறனாளிகள்/மாற்று ஆற்றலுடையோர் முதலியவர்களை பாதுகாக்கும் பொருட்டும் அவர்களை சமூகத்தில் வலுவுள்ளோராக மாற்றுவதற்கும் வேண்டிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல். விசேட உதவி தேவைப்படுவோரை உரிய நிறுவனங்களின் ஊடாக பயிற்றுவித்து அவர்களுக்கு தேவையான உதவிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் இன்றியமையாத பணியாகும்.

7.17 இயற்கை அனர்த்தங்கள், வன்முறைகளின்போது கிராம அபிவிருத்தி சங்கங்கள் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் கிராம நலன்பேண் வேலைத்திட்டங்கள்.

## 8. சங்கக் கூட்டங்கள் :

8.1. ஆரம்பக்கூட்டத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவையாளர், கிராமத்திலுள்ள முக்கியஸ்தர்கள் கட்டாயம் பங்கு பற்ற வேண்டும். பிரதேச செயலாளர், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொள்வது சிறப்பாக அமையும். புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவர்.

8.2. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சங்க பொதுக்கூட்டங்கள் நடத்தப்படல் வேண்டும். கூட்டம் நடைபெறுவதற்கு 7 தினங்களுக்கு முன்னதாக கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு சகல உறுப்பினர்களுக்கும் செயலாளர் அறிவித்தல் வேண்டும். இவ்வறிவித்தல் பகிரங்கமான இடங்களில் ஒட்டப்படல் வேண்டும் அல்லது தனிப்பட்ட அறிவித்தல் உறுப்பினர்களுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

8.3. செயற்குழுவின் தீர்மானத்திற்கேற்பவோ தலைவரின் வேண்டுகோளுக்கேற்பவோ உறுப்பினருள் 51 சதவீதத்திற்கு மேற்பட்டவர்களால் கைச்சாத்திடப்பட்டு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படும் வேண்டுகோளுக்கு ஏற்பவோ அல்லது அப்பிரதேசத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் எழுத்து மூலம் அனுப்பப்பட்ட அறிவித்தலுக்கேற்பவோ செயலாளரினால் விசேட பொதுக்கூட்டம் கூட்டப்படும். இக்கூட்டம் நடைபெறுவதற்கு 5 தினங்களுக்கு முன்னதாக பொது அறிவித்தல்கள் மூலமாகவோ தனிப்பட்ட அறிவித்தல் மூலமாகவோ உறுப்பினர்களுக்கு செயலாளரால் அறிவிக்கப்படல் வேண்டும்.

8.4. மாதத்திற்கு ஒருமுறை செயற்குழு கூட்டப்படல் வேண்டும். கூட்டம் நடைபெறுவதற்கு 5 தினங்களுக்கு முன்னதாக எழுத்து மூலமாக ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் செயலாளர் அறிவித்தல் வேண்டும்.

8.5. தலைவரின் எழுத்து மூலம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கேற்பவோ அல்லது அப்பிரதேசத்தின் பிரதேச செயலாளர் / மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் / கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் எழுத்துமூல அறிவித்தலுக்கேற்பவோ செயலாளரினால் விசேட செயற்குழுக்கூட்டம் கூட்டப்பட வேண்டும். கூட்டம் கூடுவதற்கு 3 தினங்களுக்கு முன்னதாக செயலாளர் கூட்டத்தைப் பற்றிய அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

8.6. ஆண்டு பொதுக்கூட்டம் ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படல் வேண்டும். எனினும் புதிய செயற்குழு இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை தெரிவு செய்யப்படும். இக்கூட்டம் நடைபெறுவதற்கு குறைந்த பட்சம் 14 தினங்களுக்கு முன்னதாக செயலாளர் தனிப்பட்ட முறையில் அறிவித்தல்களை அனுப்புவதுடன் பகிரங்கமான இடங்களில் கூட்டம் நடைபெறும் இடம், திகதி, நேரம் என்பனவற்றை தெளிவாக விளம்பரம் செய்தல் வேண்டும். புதிய அங்கத்தவர்கள் தெரிவு விடயம் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இடம்பெறுதல் அவசியம். இக்கூட்டத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்,கிராம சேவை உத்தியோகத்தர் ஆகியோர் கட்டாயம் கலந்து கொள்ளல் வேண்டும். அத்துடன் பிரதேச செயலாளர், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொள்வது விரும்பத்தக்கது

வரையறை செய்யப்பட்ட கால எல்லைக்குள் ஆண்டு பொதுக்கூட்டம் நடாத்தப்பட்டு செயற்குழு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படாவிட்டால் பிரதேச செயலாளர் அல்லது கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆண்டு பொதுக்கூட்டத்தினை கூட்டி செயற்குழுவினை தெரிவு செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
நிர்வாக தெரிவிற்கான பொதுக்கூட்டத்திற்கு இரண்டு தடவைகள் முயற்சித்து நடைபெறாது போகின்றபோது பணிப்பாளரின் அனுமதியுடன் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவையாளர் இணைந்த தீர்மானம் ஒன்றின் மூலம் மூன்று அங்கத்தவர்களை கொண்ட நியமன சபையினை தற்காலிகமாக தெரிவு செய்து பிரதேச செயலரின் சிபார்சுடன் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும். இந்நியமன சபையானது கிராம,மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் சகல நடவடிக்கைகளுக்கும் சட்டவலுவுள்ளதாக இருக்கும்.

8.7. **கூட்ட நடப்பெண் :**
சங்கத்தின் பொதுக்கூட்டங்கள் / விசேட பொதுக்கூட்டங்கள் / ஆண்டு பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றில் உறுப்பினருள் <u>51 வீதத்தினர்</u> சமுகமளித்தல் வேண்டும்.
செயற்குழு கூட்டங்களுக்கு செயற்குழு அங்கத்தவருள் குறைந்த பட்சம் 7 பேர் சமுகமளித்தல் வேண்டும்.

8.8. ஆண்டுப் பொதுக்கூட்டங்களில் அல்லது விசேட பொதுக்கூட்டங்களில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணைகள், சம்பந்தப்பட்ட கூட்டம் நடைபெறவுள்ள தினத்துக்கு 07 தினங்களுக்கு முன்னதாக செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். செயலாளர் அப்பிரேரணைகளின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தி எஞ்சியுள்ள பிரேரணைகளை அடுத்த கூட்டத்தில் அல்லது அதற்கு அடுத்த கூட்டத்தில் அவைபற்றி கலந்தாலோசித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 9. செயற்குழு

9.1. தொடக்கக் கூட்டத்திலும் இரு ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறும் ஆண்டுப் பொதுக் கூட்டத்திலும் கீழே தரப்பட்டுள்ளவர்கள் ஏகமனதாகவோ, வாக்களிப்பு மூலமாகவோ தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

(i) தலைவர்

(ii) துணைத்தலைவர்

(iii) செயலாளர்

(iv) துணைச்செயலாளர்

(v) பொருளாளர்

(vi) 08 செயற்குழு அங்கத்தவர், பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர் பதவி வழியாக 14வது நிர்வாகசபை உறுப்பினராக தெரிவு செய்யப்படுவார். இவருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை.

9.2. மேற்படி அலுவலாளர் மற்றும் குழு உறுப்பினர்கள் சேர்ந்து செயற்குழு உருவாக்கப்படுதல் வேண்டும்.

9.3. காப்பாளர்: கிராமத்தின் சமய தலைவர்களோ அல்லது வேறு மதிப்பிற்குரிய பெரியோர்களோ காப்பாளராக தெரிவு செய்யப்படல் வேணடும். நிர்வாக சபை உறுப்பினராக தெரிவு செய்யப்படக்கூடாது.

9.4. **தலைவர், துணைத்தலைவர், செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர்** ஆகிய ஐந்து பதவிகளிற்கும் தெரிவுசெய்யப்படுவோர் இரு தடவைகளிற்கு மேல் தொடர்ச்சியாக அப்பதவிகளை வகிக்க முடியாது.

9.5. **செயற்குழு :**

(அ) கிராமத்தின் சகல பிரிவுகளும் பிரதிநிதித்துவம் பெறும் வகையில் செயற்குழுவானது தெரிவு செய்யப்படல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு நியதிச் சட்டமுறையான அமையத்திலிருந்தும் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களிலிருந்தும் ஒரு பிரதிநிதி வீதம் கிராம அபிவிருத்தி சங்கத்தின், மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் செயற்குழுவில் உறுப்புரிமை வகித்தல் விரும்பத்தக்கது.

(இ) <u>எழுத்துமூல</u> முன் அனுமதியின்றி அடுத்தடுத்த மூன்று செயற்குழுக் கூட்டங்களுக்கு சமுகமளிக்காத செயற்குழு அங்கத்தவர் தம் பதவியை தாமாகவே இழப்பர்.

(ஈ) பாரிய குற்றச்செயல் காரணமாக நீதிமன்றத்தால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் தண்டனைக்காலம் முடிவுற்ற தினத்திலிருந்து அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு நிர்வாகசபையில் அங்கத்துவம் பெற முடியாது. புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டவர்கள் தொடர்பாக இந்த சரத்து வலுவற்றதாக கொள்ளமுடியும்.

(உ) செயற்குழுவானது தனது அலுவலக காலத்தின் போது ஏற்படும் வெற்றிடங்களை அடுத்துவரும் பொதுக்குழுவின் பொதுக்கூட்டம் அல்லது விசேட கூட்டத்தின் அனுமதி பெறுவதன் அடிப்படையில் நிரப்புதவற்கு முடியும்.

9.6. ஆண்டுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுக் கணக்கை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும். அத்துடன் திணைக்களத்தினால் அனுமதியளிக்கப்பட்ட கணக்காய்வு குழு ஒன்று வருடந்தோறும் கணக்காய்வினை மேற்கொள்ளும் என்பதுடன் விஷேட தேவைகள் எழுமிடத்து மேலதிகமான கணக்காய்வு நடவடிக்கையினையும் இந்த குழு மேற்கொள்ள பூரண அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த கணக்காய்வு குழுவிற்கான கொடுப்பனவுகள் கிராம, மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் நிதியிலிருந்தே மேற்கொள்ளப்படவேண்டும்.

9.7. அப்பிரதேசத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அச்சங்கத்தின் அலுவலக ஆலோசகராக செயற்படுதல் வேண்டும். அத்துடன் இவருக்கு செயற்குழுவினதும், பொதுச்சபையினதும் ஆவணங்கள் மற்றும் கூட்டறிக்கைகளை பரீட்சிப்பதற்கு அதிகாரம் உண்டு.

9.8. **அலுவலாளரின் முக்கிய கடமைகள் :**

9.8.1. **தலைவர்** : கூட்டங்களைத் தலைமை தாங்கி நடத்துதலும் கிராமத்தின அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொள்ளலும்

9.8.2. **துணைத்தலைவர்** : தலைவருக்கு உதவுதலும் தலைவர் இல்லாத சந்தர்ப்பங்களில் தலைவரின் கடமைகளை நிறைவேற்றுதலும்.

9.8.3. **செயலாளர்** :

(அ) கீழே தரப்பட்டுள்ள சங்கத்தின் ஏடுகளை ஒழுங்காகவும் முறைமையாகவும் வைத்திருத்தல்.

- ❖ வீட்டு இலக்கம் உட்பட உறுப்பினர் பெயர்களடங்கிய பதிவேடு
- ❖ உறுப்பினர்கள் பெயர், அட்டவணையும் இலக்கமும்
- ❖ பொதுக்கூட்டங்களின் நிகழ்ச்சிக்குறிப்பு
- ❖ செயற்குழுக்கூட்டங்களின் நிகழ்ச்சிக்குறிப்பேடு
- ❖ பொதுச்சபைக் கூட்டங்கள், செயற்குழு கூட்டங்கள் சம்பந்தமான வரவுப் பதிவேடு
- ❖ இருப்பு ஏடு (பொருளாளரால் பேணப்படுதல்)
- ❖ சம்பவக் குறிப்பேடு
- ❖ ஏனைய கடிதங்கள், ஆவணங்கள் ஆகியனவும் பொருட் பதிவேடும்
- ❖ சங்கத்தின் கடிதத்தலைப்பு புத்தகங்களும், சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரின் இலச்சினைகளும்
- ❖ சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டு அறிக்கைகள் முன்னேற்ற அறிக்கைகள் ஆகியவற்றின் பிரதிகள்
- ❖ சங்கத்தினுடைய பதிவுச்சான்றதழ்

(ஆ) சங்கத்தின் செயற்பாட்டறிக்கை, முன்னேற்ற அறிக்கைகளை மாதத்திற்கு ஒருமுறை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்தல்.

(இ) ஆண்டுப் பொதுக்கூட்டம், விசேட பொதுக்கூட்டம், செயற்குழுக்கூட்டம் ஆகியவற்றில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கேற்ப செயற்படல்.

(ஈ) சங்கத்தின் ஏடுகள் ஆவணங்கள் முதலானவற்றை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலாளர் ஆகியோர் பரிசோதிக்கும் போது சமர்ப்பித்தல்.

(உ) ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் நிகழ்ச்சிக்குறிப்பு பிரதியொன்றுடன் பொதுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுக் கணக்கை கூட்டம் நடைபெற்று ஒரு கிழமைக்குள் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் பிரதேச செயலாளருக்கும் சமர்ப்பித்தல்

(ஊ) செயலாளர் பதவியில் இருந்து விலக நேரிடின் அதற்கான காரணத்தை எழுத்து மூலம் செயற்குழுவிற்கும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் தெரிவிப்பதுடன் பொதுச்சபையின் அனுமதியுடன் புதிய செயலாளர் தெரிவு செய்யப்பட்ட பின் சகல ஆவணங்களையும் பாரமளித்தல் வேண்டும்.

9.8.4. **துணைச்செயலாளர்** :

செயலாளருக்கு உதவி செய்வதும் அவரோடு இணைந்து செயலாளருக்குரிய பணிகளை செய்வதும் இவருடைய கடமைகளாகும்.

9.7.5. **பொருளாளர்** :

சங்கப்பணத்தை பாதுகாப்பாக வைத்திருப்பதும் இக்கொடுக்கல் வாங்கல்களுக்கு பொறுப்பாக இருப்பதும் பொருளாளருக்குரிய ஏடுகள் வங்கிக்கணக்கு புத்தகம், காசோலைகள், போன்றவைகளை ஒழுங்காகவும் பாதுகாப்பாகவும் வைத்திருத்தல் பொருளாளரின் கடமைகளாகும். அத்துடன் சங்கத்தின் நிதி நடவடிக்கைகள் யாவற்றையும் ஒழுங்காக பதிந்து வைத்திருந்து மூன்று மாத காலத்திற்கு ஒருமுறை வருமானச் செலவுக்கணக்கை தயாரித்து கணக்காய்வாளருக்கும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் பரிசீலனைக்காக சமர்ப்பித்து சரியானது என்பதனை உறுதிப்படுத்த வேண்டியது பொருளாளருடைய பொறுப்பாகும்.

பொருளாளர் பதவியிலிருந்து விலக நேரிடின் அதற்கான காரணத்தை எழுத்து மூலம் செயற்குழுவிற்கும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் தெரிவிப்பதுடன் தன்வசமுள்ள சகல ஆவணங்களையும் புதிதாக தெரிவு

செய்யப்படும் பொருளாளரிடம் ஒப்படைத்த பின்னரே அவரது பதவி விலகல் செயற்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

9.7.6. **செயற்குழு உறுப்பினர்கள்** :
செயற்குழு உறுப்பினர்கள் தாம் பிரதிநிதித்துவப் படுத்தும் பகுதிகளிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் விபரங்களை பெறுவதற்கும் சந்தாப் பணத்தை அறவிடுவதற்குரிய நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்கும் அலுவலாளருக்கு ஒத்துழைத்தல் வேண்டும். அத்துடன் தமது பிரிவிற்குட்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை உடனுக்குடன் அலுவலாளருக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

10. நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை

ஒவ்வொரு சங்கமும் தலைவர், செயலாளர், பொருளாளர் அடங்கிய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையை கொண்டிருத்தல் வேண்டும். இதன் தொழிற்பாடுகள் பின்வருமாறு

(அ) சங்கத்திற்கு கிராம அபிவிருத்தி திணைக்களத்தாலும் <u>ஏனைய அரச</u>, அரச சார்பற்ற நிறுவனங்களாலும் வழங்கப்பட்ட சொத்துக்கள், நிதி ஆகியவற்றுக்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை பொறுப்பானதாகும்.

(ஆ) கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளரின் எழுத்து மூல அனுமதியின்றி எவ்வித சொத்துக்களும் விற்பனை செய்யப்படல், மாற்றப்படல் அல்லது அகற்றப்படலாகாது.

(இ) நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை சங்கத்தின் நிதி மற்றும் சொத்துக்களை பாதுகாப்பதற்கும் சங்கத்தின் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்குமான உடன்படிக்கைகளைச் செய்வதற்கு உரித்துடையவர் ஆவார்.

(ஈ) நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையில் பொருளாளர் தவிர்ந்த எவராவது உறுப்பினர் ஒருவர் பதவியில் இருந்து தாமாக விலகினால், விலக்கப்பட்டால் அல்லது மரணம் எய்தினால் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பொருத்தமான ஒருவரைச் செயற்குழு தற்காலிகமாக தெரிவு செய்து பின்னர் அடுத்துவரும் பொதுச்சபைக் கூட்டத்தில் இதற்கான அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

(உ) ஏதாவது சந்தர்ப்பத்தில் பொருளாளர் வெற்றிடம் ஏற்பட்டால் இருவார காலத்திற்குள் விசேட பொதுச்சபைக் கூட்டத்தைக்கூட்டி பொருளாளர் ஒருவரை கண்டிப்பாக தெரிவு செய்தல் வேண்டும்.

11. நிதி

(அ) ஒவ்வொரு சங்கமும் அரச அரசசார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு பொருளாகவோ, பணமாகவோ உதவிபெற உரித்துடையவர். ஒவ்வொரு வேலையும் முடிவடைந்தவுடன் அதற்குரிய வரவு செலவு கணக்கு தயாரிக்கப்பட்டு பொதுச்சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்வரவு செலவுக்கணக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டு அப்பிரதேச செயலாளர், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(ஆ) கிராமத்தில் எதிர்பாராத இடுக்கண் மற்றும் அழிவுகள் ஏற்படும் போது தற்காலிக நிதி திரட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பிரதேச செயலாளரின் அனுமதியுடன் நிதி திரட்டப்படல் வேண்டும். நிதி திரட்டப்படுவதும் செலவு செய்யப்படுவதும் மூன்று மாதகால எல்லைக்குள் நிறைவு பெறல் வேண்டும். இது சம்பந்தமான வரவு செலவுக் கணக்கு பொதுச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்னர் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரால் பிரதேச செயலாளருக்கும், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(இ) மாவட்டச் செயலாளர் மற்றும் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் அனுமதியுடன் அவசியமான சந்தர்ப்பத்தில் விசேட நிதிக்குத் தேவையான பணத்தை பிரதேச மட்டத்தில் திரட்டலாம். இவ்வாறு விசேட நிதி திரட்டப்பட்டால் ஒவ்வோர் ஆண்டும் அது சம்பந்தமான வரவு செலவுக்கணக்கு பொதுச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக பிரதேச

செயலாளருக்கும் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஈ) சங்கம் தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துமிடத்து நன்கொடைகளை அங்கத்தவர்களிடமிருந்து அல்லது வேறு அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து அல்லது வேறு மூலங்களிலிருந்து சேகரிக்கவோ அல்லது பெற்றுக்கொள்ளவோ முடியும். இத்தகைய செயற்பாட்டின் மூலம் கிடைத்த திரட்டிய இலாபத்தை மேலதிக அபிவிருத்திக்காக அல்லது ஏதாவது புதிய செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்காக உபயோகித்தல் வேண்டும்.

(உ) கிராம ,மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் அனைத்து நிதி நடவடிக்கைகளும் முன்கூட்டியே கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தல் வேண்டும்

12. நிதி நிர்வாகம் :

(அ )சகல சங்கங்களும் தனது பிரிவிற்கு அருகாமையில் இருக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரச வங்கி ஒன்றில் சேமிப்புக்கணக்கொன்றை வைத்திருத்தல் வேண்டும். வங்கியின் நடவடிக்கைகளுக்கு முதலாவது கையொப்பம் பொருளாளருடையதாகவும், இரண்டாவது கையொப்பம் தலைவருடையதாகவும் அவர் இல்லாதவிடத்து செயலாளருடையதாகவும் இருத்தல் வேண்டும். தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரின் மாதிரிக்கையொப்பங்களை கையொப்ப அட்டைகளில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ஆ) சங்கத்தின் நிதியில் ஆகக்கூடிய பணம் 2000.00___ரூபாவை பொருளாளர் அவசிய செலவினங்களுக்காக கையில் வைத்திருக்கலாம்.

(இ) சங்கத்தால் பெறப்படும் நிதிகள் சங்கத்தின் வங்கி கணக்கில் சரியான முறையில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

(ஈ) பிரதேச செயலாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் விடுமுறை காரணமாக நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாக இல்லாதிருக்கும் சந்தர்ப்பங்களில் அல்லது தனிப்பட்ட காரணங்களுக்காக பணக்கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் கையொப்பமிட மறுக்கும் சந்தர்ப்பங்களில் அவ்விடயம் சமகாலத்தில் பணிப்பாளரினதும் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரினதும் கவனத்திற்கு கொண்டு வரப்படல் வேண்டும். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இது தொடர்பாக ஆராய்ந்து மாவட்டச் செயலாளரின் அனுமதியுடன் பணத்தை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இது தொடர்பாக பணிப்பாளருக்கு உரியநேரத்தில் தெரியப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) சங்கத்தின் நிதியிலிருந்து அன்பளிப்பு நிதி ஒரு தவணையில் ரூபா 1000.00ற்கு உட்பட்ட தொகை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் அனுமதியுடனும் ரூபா 2000.00ற்கு மேற்படாத தொகை மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் அனுமதியுடனும் ரூபா 2000.00ற்கு மேற்பட்ட தொகை கிராம அபிவிருத்திப் பணிப்பாளரின் அனுமதியுடனும் வழங்கப்படுதல் வேண்டும்.

(ஊ) பணம் கொடுக்கல் வாங்கல்களின்போது பொருளாளருடன் தலைவர்/செயலாளர் ஒப்பமிட்டு அரசாங்கத்துக்காக பிரதேச செயலாளர் மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கட்டாயமாக ஒப்பமிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். (ஒருவர் மாத்திரம் உறுதிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைக்கு இடமளிக்கலாகாது)

13. நிதி வருடம் :

சகல சங்கங்களினதும் நிதி வருடம் ஜனவரி 1 ம் திகதியிலிருந்து டிசம்பர் 31 ந் திகதி வரையான காலப்பகுதியாகும்.

14. ஒப்பந்த வேலைகள் :

(அ) சங்கங்கள் ஒப்பந்த வேலைகளில் ஈடுபட முடியும்.

(ஆ) அரசாங்கத் திணைக்களத்தின் / கூட்டுத்தாபனத்தின் வேலையை ஒப்பந்தத்தில் செய்வதாயின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் பரிந்துரையுடன் பிரதேச செயலாளரிடம் முன்னனுமதி பெறல் வேண்டும்.

(இ) ஒவ்வொரு ஒப்பந்த வேலைக்கும் பேணப்பட்டு வரும் கணக்குகளை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கவனமாக பரிசீலித்த பின்னர் சங்கத்திற்குரிய கொடுப்பனவுகளை பெறுவதற்கு அனுமதித்தல் வேண்டும்.

(ஈ) சங்கத்தின் சகல ஒப்பந்த வேலைகளுக்குரிய பணமும் சங்கத்தின் சேமிப்புக்கணக்கில் இடப்படுதல் வேண்டும்.

(உ) இப்பணத்தின் 5% த்தை சங்கத்தின் நிர்வாக செலவுக்கென உபயோகிக்க முடியும். இதில் மாற்றம் ஏற்படுத்தலாகாது. மாற்றம் தேவைப்படுமிடத்து தகுந்த நியாயப்பாட்டுடன் புணிப்பாளரின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்

(ஊ) எக்காரணம் கொண்டும் சங்கங்கள் தம்மால் செய்யப்படும் ஒப்பந்த வேலையை உபஒப்பந்தகாரரிடம் வழங்கலாகாது.

(எ) ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவிலும் ஒவ்வொரு ஒப்பந்த வேலைகளுக்குரிய வரவுசெலவுக்கணக்குகள் வெவ்வேறாக தயாரிக்கப்பட்டு வருடாந்த பொதுக்கூட்டத்தில் பொதுச்சபையிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

15. யாப்பை திருத்துதல் :

(அ) இவ்யாப்பு விதியில் ஏதாவது மாற்றங்கள் திருத்தங்கள் செய்ய வேண்டியிருப்பின் வருடாந்த பொதுக்கூட்டம் அல்லது விசேட பொதுக்கூட்டத்தில் அங்கத்தவரின் 2/3 பங்கினரின் அனுமதியுடன் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரினால் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக கிராம அபிவிருத்தி பணிப்பாளரிடம் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(ஆ) சங்கத்தின் வளர்ச்சிக்கு அவசியமான விடயங்கள் பற்றியும் சங்கத்தின் உரிமைகள் பற்றியும் ஆலோசனை வழங்குவதற்கு பிரதேச செயலாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் உரித்துடையோராவர்.

(இ) சங்கத்தின் நிதியை கையாடல் மோசடி செய்தல் போன்ற நடவடிக்கைகள் எழும் சந்தர்ப்பங்களில் இது தொடர்பாக மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரால் விசாரணை செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ள விடயங்களை கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இக்கண்டு பிடிப்புக்களின் அடிப்படையில் பணிப்பாளர் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையை அல்லது நிர்வாக உறுப்பினர்களை நீக்குவதற்கு அல்லது மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துவதற்கும் முடியும்.

கிராம,மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களை முறைகேடாக பயன்படுத்தும் நிர்வாகத்தினர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க பணிப்பாளருக்கு பூரண அதிகாரம் வழங்கப்படுவதுடன் நிதி விடுவித்தல் தொடர்பான ஆவணங்களில் கையொப்பம் இடுகின்றபோது திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்காத கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கைமூலம் தண்டனைகளை பெற்றுக்கொடுக்க பணிப்பாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது.

(ஈ) சங்கத்தின் பதிவு இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பங்களில் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையிலுள்ள சகல ஆவணங்கள் உபகரணங்கள் யாவும் பணிப்பாளரின் உத்தரவிற்கமைய கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் பாதுகாப்பில் வைக்கப்படும்.

(உ) இவ் யாப்பினுடைய ஏற்பாடுகள் அனைத்தும் சங்கம் பதிவு செய்யப்படும் நாளிலிருந்து செயற்படும் வண்ணம் நடைமுறைக்கு வரும்.

16. கிராம அபிவிருத்தி தொடர்பாக சங்கங்களிற்கு கிடைக்கப்பெறும் உதவி தொடர்பில் கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் வழங்கப் பெற்ற அறிவுறுத்தல்களின் வண்ணம், கிராம அபிவிருத்தி தொடர்பான அரசின் கொள்கைத் தத்துவங்களின் அடிப்படையில் அல்லது யாப்பின் பிரகாரம் ஒழுகாதிருத்தல் அல்லது சங்கங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக முறைப்பாடுகள், பிரச்சினைகள் கிடைக்கப்பெறுமிடத்து இது சார்பாக உரியநடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோரின் ஆலோசனையுடன் கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரிற்கு பூரண அதிகாரம் உண்டு.

17. கிராம, மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்றின் செயற்பாடுகள் யாப்பு விதிக்கு முரணாகவோ அல்லது பிரதேச மக்களது அல்லது அதிகார எல்லைக்குட்பட்ட மக்களது அன்றாட செயற்பாடுகளக்கு குந்தகமாகவோ அல்லது அரச நிர்வாக நடவடிக்கைகளுடன் இணைந்து செயற்படாமலோ இருப்பதாக பிரதேச செயலாளர் கருதுகின்ற பட்சத்தில் குறித்த நிர்வாகத்தை இடை நிறுத்தி வைப்பதற்கு பிரதேச செயலருக்கு அதிகாரம் அளிக்கப்டுவதுடன் தொடர்புடைய தகவலை உடனடியாக பணிப்பாளருக்கும் தொடர்புடைய ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்தவேண்டியது பிரதேச செயலரின் கடமையாகும்

18. வட மாகாண சபையினாலும் மத்திய அரசினாலும் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற கிராம அபிவிருத்தியில் நிதிப்பயன்பாடு மற்றும் நிர்வாகம் உள்ளிட்ட அனைத்து கொள்கைத் தத்துவங்களின் அடிப்படையில் அவற்றின் அமுலாக்கல் தொடர்பாக நடவடிக்கைகள் எடுப்பது கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படும் அனைத்துச் சங்கங்களின் கடமையாகும்.

## அத்தியாயம் - 2

### சங்கத்தைப் பதிவு செய்தல்

ஒரு சங்கம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக சிறந்த முறையில் இயங்கி வருவது தொடர்பாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருப்தியடையுமிடத்து மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக சங்கத்தைப் பதிவு செய்வதற்கு தேவையான கீழ்வரும் ஆவணங்களுடன் கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பதிவிற்காக பின்வரும் ஆவணங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

1. கிராம அபிவிருத்தி சங்கத்தை பதிவு செய்யும் விண்ணப்பப்படிவம் - 3 பிரதிகள்
2. கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் பெயர், முகவரி கையொப்பம் அடங்கிய அட்டவணை - 3 பிரதிகள்
3. ஆரம்பக் கூட்ட அறிக்கை - 3 பிரதிகள்
4. சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினர்களின் பெயர், முகவரி, கையொப்பம் அடங்கிய அட்டவணை - 3 பிரதிகள்
5. நிர்வாக உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட யாப்புவிதியின் பிரதி - 3 பிரதிகள்
6. அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுடனான கிராமத்தின் வரைபடம் - 3 பிரதிகள்ஸ்ரீ
7. பதிவிற்கான தகவல் படிவம் - 3 பிரதிகள்

மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் படிவம் இத்துடன் இணைக்கப்படுகின்றது.

## வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படும் மற்றும் புனரமைக்கப்படும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள்/மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தொடர்பான யாப்பு விதியினை திருத்துவற்கான கலந்துரையாடல்.

மேற்படி விடயம் தொடர்பாக NP/19/By Law இலக்க 01.10.2007ம் திகதிய யாப்பு தொடர்பாக,

கிராம அபிவிருத்திச் சங்கங்கள்/மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் நிர்வாக ,பொதுக் கூட்டங்களில் மக்களின் கேள்விகளுக்கும் அவர்களின் செயல்பாட்டினை முன்னெடுப்பதற்கும் ஏற்றவகையிலும் போருக்கு பின்னர் வரும் அபிவிருத்தி திட்டங்கள் எல்லாம் மக்கள் பங்களிப்புடனும், சங்கங்களின் ஊடாகவே

முன்னெடுக்கப்படுகின்றமையால் மக்களின் தேவைகளையும் செயல் பாட்டினையும் விரிவு படுத்துவதற்கும் ஏற்றவகையில் திணைக்களத்தின் யாப்பில் பல்வேறுபட்ட மாற்றங்களினை கொண்டு வரவேண்டும் என வெளிக்கள பணியில் ஈடுபடும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வேண்டுகோலுக்கு அமைவாகவும்,அவர்கள் வெளிக்கள பணியில் கண்ட அனுபவங்களை கொண்டும் திணைக்களத்தின் யாப்பில் மாற்றம் கொண்டு வரவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு யாப்பினை திருத்துவதற்கான குழுவானது கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் தலைமையில் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தாகள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தாகள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளடக்கிய வகையில் அமைக்கப்பட்டது. இக்குழு பல்வேறு மட்டங்களில் மேற்கொண்ட கலந்துரையாடல்கள் மூலம் பெற்ற தகவல்களை கொண்டு சங்கத்திற்கான யாப்பு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

## யாப்பு திருத்த உருவாக்கல் குழுவும் அவர்களது உறுதிப்படுத்தலும்.

| இல. | பெயர். | பதவி நிலை | கையொப்பம். |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |
| 03 | | | |
| 04 | | | |
| 05 | | | |
| 06 | | | |
| 07 | | | |
| 08 | | | |
| 09 | | | |
| 10 | | | |
| 11 | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |